# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:154** **தேதி:-10.03.2017**

**ஓய்வூதியர்களுக்கு இரவு நேர இலவச அழைப்புத் திட்டம் அனுமதி மற்றும் பிற செய்திகள்**

அன்பார்ந்த தோழர்களே,

இரவு நேர இலவச அழைப்பு என்கிற சந்தாதாரர்களுக்கு வழங்கும் சலுகையினை BSNL ஊழியர்களுக்கும், ஓய்வு பெற்றவரகளுக்கும் நீட்டிக்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது. தற்போது அந்த கோரிக்கையில் ஒரு பகுதி ஏற்றுக் கொள்ளப்பட்டு ஓய்வூதியர்களுக்கு இரவு நேர இலவச அழைப்புக்கான வசதியை நீட்டித்து 09.03.2017 அன்று நிர்வாகம் உத்தரவை வெளியிட்டுள்ளது. பணியில் உள்ள ஊழியர்களுக்கும் இந்த வசதியை பெறுவதற்கான முயற்சியை மத்திய சங்கம் தொடர்ந்து மேற்கொள்ளும்.

**BSNL ஊழியர்களுக்கான ஊதிய மாற்றம்:-** பொது செயலாளர் மற்றும் துணைப் பொது செயலாளர் ஆகிய இருவரும், 07.03.2017 அன்று BSNL CMD அவர்களை சந்தித்து ஊழியர்களுக்கான ஊதிய மாற்றத்தின் நிலை என்ன என்று விசாரித்தனர். இது தொடர்பாக DOT செயலாளருக்கு விரைவில் ஒரு PRESENTATION தர உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதிகாரிகளுக்கான 3வது ஊதிய மாற்றக் குழுவின் விவரங்கள் சில ஊடகங்களில் வெளியாகி உள்ளது. அதன் பல பரிந்துரைகளில் ஊழியர்களுக்கு சாதகமில்லாத பல அம்சங்கள் உள்ளன. குறிப்பாக "வழங்கக் கூடிய தன்மை"(AFFORDABILITY) தொடர்பான அம்சம் ஊழியர்களுக்கு எதிராக உள்ளது. தற்போதுள்ள அரசாங்கத்தின் கார்ப்பரேட் ஆதரவு, தொழிலாளர் எதிர்ப்பு நிலைபாடுகளை கவனிக்கையில், அரசாங்கத்திற்கு ஒரு நிர்பந்தத்தை கொடுப்பதற்காக அனைத்து அதிகாரிகளும், ஊழியர்களும் ஒன்று பட்ட இயக்கத்திற்கு தயாராக வேண்டியது அவசியம்.

இது தொடர்பாக விவாதிக்க 15.03.2017 அன்று மாலை 03.00 மணிக்கு BSNL MS சங்க அலுவலகத்தில் அனைத்து அதிகாரிகள் மற்றும் ஊழியர் சங்கங்களின் கூட்டம் நடைபெற உள்ளது.

**மீண்டும் சாதித்துள்ள BSNL:-** கடந்த பிப்ரவரி மாதத்திலும் BSNL நிறுவனம் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட புதிய மொபைல் வாடிக்கையாளர்களை பெற்றுள்ளது. ரிலையன்ஸ் ஜியோவின் கடுமையான போட்டி மற்றும் மோடி அரசாங்கம் அந்நிறுவனத்திற்கு வழங்கி வரும் கடுமையான ஆதரவிற்கிடையில் BSNL நிறுவனம் பிப்ரவரி மாதத்தில் 21,86,137 இணைப்புகளை பெற்றுள்ளது சிறப்பம்சமாகும். உத்தரகாண்ட் மாநிலம் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விஞ்சி 261% இலக்கை அடைந்துள்ளது. நமது தமிழகம் 2,37,137 இணைப்புகளை கொடுத்து இந்தியாவிலேயே அதிகமான இணைப்புகளை கொண்ட மாநிலமாக திகழ்கிறது. அனைவருக்கும் BSNL ஊழியர் சங்கத்தின் வாழ்த்துக்கள்.

**ஓய்வூதிய நிதி மற்றும் பணிக்கொடை நிதி அறங்காவலர் குழுவில் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கு இடமில்லை:-** BSNLல் நேரடியாக நியமிக்கப்பட்ட ஊழியர்களின் ஓய்வூதிய நிதியினையும், பணிக்கொடை நிதியினையும் பராமரிக்க அறங்காவலர் குழுக்களை நிர்வாகம் உருவாக்கியுள்ளது. இந்த இரண்டு குழுக்களிலும், அங்கீகரிக்கபட்ட சங்கமான BSNL ஊழியர் சங்கத்திற்கு பிரதிநிதித்துவம் தரப்படவில்லை. எனவெ பொது செயலாளர் மற்றும் துணைப் பொது செயலாளர் ஆகிய இருவரும், 07.03.2017 அன்று BSNL CMD அவர்களை சந்தித்து நமது கடுமையான எதிர்ப்பை பதிவு செய்யும் வகையில் ஒரு கடிதத்தையும் கொடுத்து விவாதித்தனர். இந்த விஷயத்தில் அக்கறையுடன் தலையிடுவதாக CMD உறுதி அளித்துள்ளார்.

**தலமட்ட கவுன்சில்கள்:-** 7வது உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தல் முடிவடைந்து சுமார் 10 மாதங்கள் ஆகி விட்டன. இன்னமும் நமது தமிழ் மாநிலத்தில் இருந்து ஒரு சில மாவட்டங்களில் இருந்து கவுன்சில் உறுப்பினர் பட்டியல் வரவில்லை. எனவே உடனடியாக மாவட்ட சங்கங்கள் அதனை மாநில சங்கத்திற்கு அனுப்பிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

**WELFARE BOARD மற்றும் SPORTS AND CULTURAL BOARD கூட்டங்கள் நடைபெறாதது தொடர்பாக**..:- WELFARE BOARD மற்றும் SPORTS AND CULTURAL BOARD கூட்டங்கள் நடத்துவதில் நிர்வாகம் அதீத காலதாமதப்படுத்துகிறது. இந்த பிரச்சனையை பொது செயலாளர் மற்றும் துணைப் பொது செயலாளர் ஆகிய இருவரும், 07.03.2017 அன்று BSNL CMD அவர்களை சந்தித்து உடனடியாக இந்தக் கூட்டங்களை நடத்த வேண்டும் என வலியுறுத்தினர். இதனை ஏற்றுக் கொண்ட CMD அவர்கள் உடனடி நடவடிக்கைக்கு உறுதி அளித்துள்ளார்.

**கூடுதல் நேரடி நியமன JE பதவிகள்:-** முதல் பட்டியலில் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டு பின்னர் நீக்கப்பட்டுள்ளவர்களுக்கும், பணி நியமனம் கிடைக்கக்கூடிய வகையில், நேரடி நியமன JEக்கள் பதவியில் கூடுதல் இடங்களை ஒதுக்க வேண்டும் என பொது செயலாளர் மற்றும் துணைப் பொது செயலாளர் ஆகிய இருவரும், 07.03.2017 அன்று BSNL CMD அவர்களை சந்தித்துக் கேட்டுக் கொண்டனர். அதே போல சில மாநிலங்களில், வரையறுக்கப்பட்ட மதிப்பெண்களை விட கூடுதலாக மதிப்பெண்கள் பெற்றவர்களைக் கூட பரிசீலிக்கவில்லை என்பதையும் தலைவர்கள் சுட்டிக் காட்டினார்கள். இந்த பிரச்சனையை பரிவு அடிப்படையில் பரிசீலிப்பதாக CMD உறுதி அளித்துள்ளார்.

**BSNLசொத்துக்களை தன்னிச்சையாக DOT எடுத்துக் கொள்வது தொடர்பாக:-** BSNLன் அலுவலகங்களையும், கட்டிடங்களையும் தன்னிச்சையாக DOT எடுத்துக் கொள்வது தொடர்பான பல செய்திகள் வருகின்றன. இது தொடர்பாக பொது செயலாளர் மற்றும் துணைப் பொது செயலாளர் ஆகிய இருவரும், 07.03.2017 அன்று BSNL CMD அவர்களை சந்தித்து விவாதித்தனர். BSNL தலைமையகத்தின் ஒப்புதல் இன்றி இது போன்று நடைபெறக் கூடாது என்பதை நமது தலைவர்கள் வலியுறுத்தியதை CMD ஏற்றுக் கொண்டார். இது போன்று நிகழ்வுகள் நடைபெறும் சமயத்தில் தகவல்களை நமது மத்திய மாநில சங்கங்களின் கவனத்திற்கு கொண்டு வர வேண்டும்.

**ஊழியர் அதிகாரிகள் ஒற்றுமையும் BSNL நிர்வாகமும்:-** அதிகாரிகளும், ஊழியர்களும் ஒன்றுபட்ட இயக்கங்களை நடத்தக்கூடாது என BSNL நிர்வாகம், BSNLல் உள்ள அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களான BSNLEU, NFTE மற்றும் SNEA சங்கங்களுக்கு 08.03.2017 அன்று ஒரு கடிதத்தை வழங்கியது. இது தொழிற்சங்க உரிமைகளுக்கும், ஊழியர்கள்-அதிகாரிகள் ஒற்றுமைக்கும் நிர்வாகம் அடிக்க நினைக்கும் சாவு மணி. இந்தக் கடிதம் திரும்பப் பெறப்படவில்லை என்றால் நிர்வாகத்திற்கு வழங்கி வரும் அனைத்து ஒத்துழைப்புகளையும் தாங்கள் திரும்ப பெற நேரிடும் என எச்சரித்து BSNL ஊழியர் சங்கம் 08.03.2017 அன்றே ஒரு கடிதத்தை நிர்வாகத்திற்கு கொடுத்தது. நமது CMD உடனடியாக அந்தக் கடிதத்தின் மீது நடவடிக்கை எடுத்துள்ளார். அதன் விளைவாக அடுத்த நாளே, 09.03.2017 அன்று அந்த கடிதத்தை, மறு உத்தரவு வரும் வரை நிறுத்தி வைத்துள்ளதாக தெரிவித்து மற்றொரு கடிதத்தை கார்ப்பரேட் அலுவலகம் வெளியிட்டுள்ளது.

**உரிய காலத்தில் ஓய்வூதிய மாற்றம்**:- ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதிய மற்றம் செய்யப்பட வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் தொலை தொடர்பு துறையின் MEMBER(SERVICES)க்கு ஒரு கடிதம் எழுதியிருந்தது. BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் தோழர் சுவபன் சக்கரவர்த்தி Dy.GS ஆகியோர் திரு R.K.மிஸ்ரா, MEMBER (SERVICES) DOT அவர்களை 09.03.2017 அன்று சந்தித்து விவாதித்தனர். கடந்த முறை ஆனதை போல இந்த முறை ஓய்வூதிய மாற்றம் காலதாமதப்படுத்தப்பட்டு விடக் கூடாது என தலைவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இது தொடர்பான நடவடிக்கைகளை ஏற்கனவே எடுத்துள்ளதாகவும், 01.01.2017 முதல் நடைபெற இருக்கும் ஓய்வூதிய மாற்றம் உரிய காலத்தில் நடைபெற MEMBER (SERVICES) உறுதி அளித்துள்ளார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**